C. S. (Main) Exam.: 2011

D-DTN-L-UBA

# TAMIL
## Paper I
## (Literature)

*Time Allowed : Three Hours*

*Maximum Marks : 300*

---

***INSTRUCTIONS***

***Candidates should attempt questions 1 and 5 which are compulsory, and any THREE of the remaining questions, selecting at least ONE question from each Section.***

***All questions carry equal marks.***

***Answers must be written in Tamil.***

---

## SECTION A

1. பின்வருவன ஒவ்வொன்றிற்கும் 200 சொற்களுக்கு மிகாமல் சிறு குறிப்பு வரைக : *20×3=60*

(அ) தென் திராவிட மொழிகளிலும் தெலுங்கிலும் மூலத் திராவிட (Proto Dravidian) மொழிக் கூறுகள் எவ்வெவ்வாறு மாற்றமடைந்து வழக்கில் உள்ளன என்பதைக் காட்டுகளுடன் விளக்குக.

(ஆ) தூது இலக்கியத்திள் தோற்றம் வளர்ச்சி வகை மாதிரிகள் ஆகியவற்றை ஆராய்ந்து விளக்குக.

(இ) சங்க இலக்கியம் மதச்சார்பற்றது என்பார் கூற்றைச் சீர்தூக்கி ஆராய்க.

2. (அ) தமிழில் கிளைமொழி வழக்குகள் பற்றி ஆராய்க. 30

(ஆ) காலந்தோறும் தமிழ் மொழியில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்களை ஆராய்ந்து சுட்டுக. 30

3. (அ) இரட்டைகாப்பியங்களில் இடம்பெற்றுள்ள பெண்பாத்திரங்களை ஒப்பிட்டாய்க. 30

(ஆ) தமிழ் நீதி இலக்கியங்கள் சமயப் பின்னணியில் விளைந்தனவே. இக் கூற்றை ஆராய்க. 30

4. (அ) தமிழ்ப் பக்தி இலக்கியங்களைப் பிற இந்திய மொழிப் பக்தி இலக்கியப் பின்னணியில் ஒப்பிட்டாய்க. 20

(ஆ) இந்திய விடுதலைப் போராட்டக் காலம் தொடங்கி. இன்றுவரை தமிழில் எழுந்துள்ள இலக்கியங்கள் (கவிதை, புதுக் கவிதை, புதினம், சிறுகதை போன்றவை) பெரும்பாலும் தமிழ்ச் சமுதாயத்தில் தோன்றிய பற்வேறு இயக்கங்களால் ஏற்பட்ட சமுதாய, தனிமனித விழிப்புணர்ச்சியின் வெளிப்பாடாகவே அமைந்துள்ளன என்னும் கருத்தை ஆராய்க. 40

## SECTION B

5. பின்வருவன ஒவ்வொன்றிற்கும் 200 சொற்களுக்கு மிகாமல் சிறு குறிப்பு வரைக : *20×3=60*

(அ) தொல் காப்பியர் கூறும் உள்ளுறை, இறைச்சி பற்றிய கருத்துக்களை ஆராய்ந்து எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

(ஆ) தமிழ் வளர்ச்சியில் பிற நூல் மொழி பெயர்ப்பின் பங்கு பற்றி ஆராய்க.

(இ) தமிழ் மொழியில் அறிவியல் வளர்ச்சியை மதிப்பிடுக.

6. (அ) தமிழில் எழுந்த அங்கத இலக்கியம் பற்றி ஆராய்க. *20*

(ஆ) ஒப்பியல் இலக்கியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை விளக்கிப் பாரதியையும் தாகூரையும் ஒப்பிடுக. *40*

7. (அ) நாட்டார் இலக்கியம் எழுத்திலக்கியத்தின் முன்னோடி என்ற கருத்தை ஆராய்க. *30*

(ஆ) தமிழ் நாடக வளர்ச்சியை மதிப்பிடுக. *30*

8. (அ) தமிழ்ப்பண்பாட்டு உருவாக்கத்தில் மதங்களின் பங்கு என்பது பற்றி ஆராய்ந்து விளக்குக. *30*

(ஆ) இன்றைய ஊடகங்களில் தமிழ் மொழிப் பயன்பாடு பற்றித் திறனாய்ந்து விளக்குக. *30*